MCOP.54/ 2023- PW1 .

திரு. ராமப்பா, த/பெ.பெரியமுனியப்பா

நாள்:12.02.2026.

குறுக்கு விசாரணை 2 வது எதிர்மனுதாரர் தரப்பில்:

TN 70 7821 என்ற வாகனம் என்னுடையதா என்றால் ஆமாம். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து ஏற்படும் போது நான் கெலமங்கலத்தில் இருந்து தேன்கனிக்கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் சென்ற லாரியின் பின்பக்கத்தில் மோதி தான் எனக்கு அடிப்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் நான் வேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்று எனக்கு முன்னால் சென்ற லாரியின் பின் பக்கத்தில் எனது அஜாக்கரதையாலும், கவனக்குறைவாலும் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை லாரியின் மீது மோதி விபத்தை நானே ஏற்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி உள்ளதா என்றால் இல்லை. விபத்தானது எனது அஜாக்கரதையாலும், கவனக்குரைவாலும் ஏற்பட்டிருப்பதால் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் மேஸ்திரி வேலை செய்து, மாதம் ரூ.20,000 சம்பாரிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிர்கால மருத்துவ செலவு ஏற்படுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இடது தோள்பட்டையில் அடிப்பட்டு ராடு வைக்கப்பட்டிருக்கிறது. ராடு இன்னமும் இருக்கிறது. எனக்கு இடது கால், இடது வயிறு, இடது கை ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனைபில்களை மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருப்பித்தால் எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் நீதிமன்றம் இறுதிஉத்தரவில் கழித்து

கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 07.12.2015 லேயே பர்மிட் முடிந்துவிட்டது என்றும் விபத்தின் போது பர்மிட் இல்லை என்றும் அதனால் பாலிசி விதிமீறல் இருப்பதால் 2 வது எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் நான் எதாவது நஷ்டஈடு பெறவேண்டும் என்றால் 1 வது எதிர்மனுதாரரிடம் தான் பெறவேண்டும் என்றால் சரியல்ல. 2வது எதிர் மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.